**சுருக்கம்**

பள்ளிக்கல்வி – மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வருகைப் பதிவேடு புதிய தொழில் நுட்ப தொட்டுணர் (Bio-Metric) வருகைப் பதிவு முறை அறிமுகப்படுத்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வி(ஆ.தே.வா)துறை**

அரசாணை(நிலை)எண்.45 நாள்: 13.03.2017

திருவள்ளுவர் ஆண்டு 2048

துன்முகி வருடம், மாசி 29

படிக்க:–

1. சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 23.08.2016 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பு.
2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக கடித ந.க.எண். 6214/EDP/2016, நாள் 21.10.2016.

-------

**ஆணை:–**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 23.08.2016 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது:–

"மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வருகைப் பதிவேடு கையாள்வதில் தற்போது உள்ள கையெழுத்திடும் நடைமுறையை மாற்றி புதிய தொழில்நுட்ப உத்தியின் அடிப்படையில் தொட்டுணர் Bio-Metric கருவிகளைக் கொண்டு வருகைப் பதிவு முறை முதன்முறையாக அறிமுகப்படுத்தப்படும். இதற்கென 45 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்."

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் அவர்கள், பள்ளிகளில் தொட்டுணர் (Bio–Metric) கருவிகளை நிர்மாணிப்பது தொடர்பாக பெரம்பலூர் மாவட்டத்தில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொட்டுணர் (Bio–Metric) கருவிகளின் செயல்பாடு குறித்து பள்ளிகளில், இதற்கென நியமிக்கப்பட்ட குழு கள ஆய்வு செய்து பின்வரும் விபரங்களை சமர்ப்பித்துள்ளது என தெரிவித்துள்ளார்:–

1. தொட்டுணர் கருவி ( Bio – Metric ) வருகைப் பதிவு முறையானது, இரு வகையான முறைகளில் பயன்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

2. ஆதார் எண் சார்ந்த தொட்டுணர் கருவி (Bio–Metric) வருகைப் பதிவு முறையானது, ஆசிரியர்களுக்கு மட்டும் பயன்படும் வகையில் என்.ஐ.சி. (NIC) மென்பொருள் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

3. மாணவர்களுக்கு Tablet-ஐ பயன்படுத்தி பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட மென்பொருள் மூலம் அவர்களின் வருகையானது பதிவு செய்யப்படுகிறது.

4. இந்த சாதனமானது, டி.ஜி.எஸ். & டி (DGS&D) விலை அங்கீகாரம் பெற்றுள்ளது.

5. பெரம்பலூர் மாவட்டத்தில் தொட்டுணர் கருவி (Bio – Metric) பயன்பாட்டிலுள்ள பள்ளிகளில், தொட்டுணர் சாதனத்தில் 90 சதவீத அளவிலான மாணவர்கள் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கும் நேரத்திற்கு முன்பே பதிவு செய்து விடுகின்றனர். பதிவு செய்யாத மாணவர்களுக்கு, இந்த சாதனம் அவர்களின் வகுப்பறைக்கு கொண்டு செல்லப்பட்டு வருகையானது பதிவு செய்யப்படுகிறது. 2 ஆசிரியர்கள், முதல் பாட வேளைகளில் பிரத்யேகமாக இப்பணியினை மேற்கொள்கின்றனர்.

6. இந்த சாதனத்தில் அனைத்து வகுப்பு மாணவர்களின் வருகையானது பதிவு செய்யப்பட்டபின், இப்பணியினை மேற்கொள்ளும் ஆசிரியர் மூலம் இவ்விவரங்கள், சென்ட்ரல் சர்வர் மூலமாக ஒருங்கிணைக்கப்படுகிறது. இதற்கு பி.எஸ்.என்.எல் (BSNL) மற்றும் தனியார் அலைபேசி சிம்கார்ட் சேவைகள் பயன்படுத்தப்படுகிறது. சிக்னல் (Signal) வலிமை குறைவாக இருக்கும்பட்சத்தில், இந்த சாதனமானது வெளியில் எடுத்துச் செல்லப்பட்டு, சிக்னல் கிடைக்கும் இடத்தில் இயக்கப்படுகிறது. தோராயமாக ஒரு கைவிரல் ரேகை பதிவு செய்ய 5 முதல் 13 நொடிகள் தேவைப்படுகிறது.

7. முன்விவரத்தொகுப்பு (Pre loaded data base) செய்யப்பட்ட தகவல் விவரத்தில் குழந்தைகளின் பெயர் / வகுப்பு / பிரிவு / பட்டியல் எண் / பாலினம் மற்றும் பதிவு செய்யப்பட்ட கைவிரல் ரேகை பதிவேற்றம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு பள்ளியின் சாதனமானது, அப்பள்ளியின் DISE Code மூலம் அறியப்படுகிறது.

8. சர்வரில் ஒருங்கிணைக்கப்பட்டபின், அதிலிருந்து அறிக்கைகள் தயார் செய்யப்படுகிறது. இந்த அறிக்கைகளில் வகுப்புவாரியாக பள்ளி மாணவர்கள் வருகை / வராமை மற்றும் மூன்று நாட்களுக்கு மேல் தொடர்ச்சியாக வராமலிருப்போர் போன்ற விவரங்கள் பெறப்படுகிறது.

9. ஆதார் எண்ணுடன் கூடிய தொட்டுணர் வருகைப் பதிவு ஆசியர்களுக்காக பயன்படுத்தப்படுகிறது. இணையதள வசதியுடன் கூடிய கணினி, இத்திட்டத்தினை செயல்படுத்த அத்தியாவசியமாக தேவைப்படுகிறது. மேற்கூறிய முறையானது, NIC நிறுவனத்தின் மென்பொருளால் இயக்கப்படுகிறது. ஆசிரியர்களின் ஆதார் அட்டையிலுள்ள கடைசி 8 எண்கள் வருகைப்பதிவு அடையாள எண்ணாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் வருகையினை உள்ளீடு செய்யும்போது, இந்த அடையாள எண் ஆதார் தகவல் தொகுப்புடன் ஒப்பீடு செய்யப்பட்டபின், ஆசிரியர் புகைப்படம் தொட்டுணர்சாதனத்தில் காட்சியளிக்கப்பட்டபின், வருகைப்பதிவு செய்யப்படுகிறது. இந்தப் பணியானது முடிவடைய சுமார் 7 முதல் 8 நொடிகள் தேவைப்படுகிறது.

இந்த முறையை செயல்படுத்த, தடையற்ற இணையதள வசதி மற்றும் மின்வசதி இருக்க வேண்டியது அவசியமாகும். இந்த முறையானது மத்திய அரசு அலுவலகங்கள் மற்றும் சில மாநில அரசு அலுவலகங்களில் பயன்பாட்டில் உள்ளது.

10. தொட்டுணர்கருவி வருகைப்பதிவு திட்டம், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் மட்டும் இம்மாவட்டத்தில் மாதிரி அடிப்படையில் செயல்பாட்டில் உள்ளது. இந்தச் செயல்பாடு தொடக்கப் பள்ளிகளில் இதுவரையில் செயல்படுத்தப்படவில்லை.

11. மாணவர்களுக்கு பயன்படுத்தப்படும் தொட்டுணர் கருவி வருகைப்பதிவு முறையையே ஆசிரியர்களுக்கும் பின்பற்றலாம் எனவும் அடையாள எண் (ID No.) மூலமாக வருகைப் பதிவு செய்வதன் மூலம், பதிவு செய்யும் நேரத்தை குறைக்கலாம் எனவும் ஆசிரியர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

3. இத்திட்டத்தினை கண்காணிக்கும் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் பின்வருமாறு கருத்து தெரிவித்துள்ளதாக கள ஆய்வு குழு தெரிவித்துள்ளது எனவும், 'ஆதார் இணைப்புடன் கூடிய தொட்டுணர் வருகைப்பதிவு திட்டம் '(AEBAS)'' இணையதள இணைப்பு வசதி அனைத்து பள்ளிகளில் இருந்தால் மட்டுமே செயல்படுத்த இயலும். எனவே இதனைத் தவிர்த்து பெரம்பலூர் மாவட்டத்தில் பயன்படுத்தப்படும் தனிப்பட்ட மென்பொருள் மற்றும் சாதனங்களைப் பின்பற்றியே இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம். மேலும் மற்ற மாவட்டங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு முன்னதாக, பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் முன்மாதிரியாக நடைமுறைப்படுத்தலாம் எனவும், மேலும், பல்வேறு விரிவான விவாதங்களுக்கு பின்னர் இத்திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்த பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என கலந்தாய்வு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது எனவும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்:–

1. ஏற்கனவே தொட்டுணர் வருகைப்பதிவு நடைமுறையில் உள்ள பிற மாநிலங்களில் ஏதும் இருப்பின், அதனை அரசு துணைச் செயலர் மற்றும் சில இயக்குநர்கள் / இணை இயக்குநர்கள் அடங்கிய குழு பார்வையிட்டு அதன் விவரங்கள் அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

2. பெரம்பலூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள சுமார் 50 பள்ளிகளில் ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டுக்கு மிகாமல் முன்னோடித் திட்டமாக செயல்படுத்த பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கலாம்.

3. சந்தையில் உள்ள நிறுவனங்களை கொண்டு தொட்டுணர் கருவி, தொழில்நுட்ப செயல்பாடு குறித்து ஒரு கூட்டத்தை (Technology Demonstration Meeting) ஏற்படுத்தி, பல்வேறு தொட்டுணர் கருவிகளின் தொழில்நுட்ப விவரங்கள், அதன் சிறப்பு அம்சங்கள் மற்றும் அதன் உபயோகத்தினை சமர்ப்பிக்க கேட்கலாம் எனவும்,

4. மேற்கண்ட நடைமுறைகளின் அடிப்படையில் தொட்டுணர் வருகைப் பதிவு முறையை நடைமுறைப்படுத்தும் செயல்திட்டத்தினை வகுக்கலாம் எனவும்

5. துல்லியமான நடைமுறைத் தன்மையைக் கருத்தில் கொண்டு, தேவைப்படின் திட்டத்தை கட்டம்–I, கட்டம் – II என்ற அளவில் செயல்படுத்தலாம் எனவும்,

6. இத்திட்டத்திற்கான செலவினத்தை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து (One time) மேற்கொள்ளலாம்,

7. இத்திட்டத்தை செயல்படுத்த பல்வேறு இயக்ககங்கள் கீழ்கண்டவாறு இணைந்து செயலாற்ற வேண்டும்:–

| வ. எண். | துறையின் பெயர் | மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் |
|---|---|---|
| 1. | பள்ளிக் கல்வி இயக்ககம்<br>தொடக்கக் கல்வி இயக்ககம் | பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளிகள் ஆகியவற்றின் எண்ணிக்கையின் அடிப்படையில் தேவையான முக்கிய விவரக் குறிப்புகளை (Data) தயார் செய்தல் மற்றும் இத்திட்டத்தினை திறம்பட செயல்படுத்த மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளிகள் விவரங்களின் சரித்தன்மை இணைய இணைப்பு நிலை போன்ற விவரங்கள் அளித்தல்.<br>உரிய தகவல்களை பெற்று திட்ட செயலாக்கத்திற்கு அளித்தல். பள்ளிக் கல்வித் துறை / தொடக்கக் கல்வித் துறை ஆகியவற்றின் கீழ் செயல்படும் துறைகளுக்கு அவர்தம் பயன்பாட்டிற்கு கொண்டு வருதல். |
| 2. | மாநில திட்ட இயக்ககம் (SSA) | ஏற்கனவே பெரம்பலூர் மாவட்டத்தில் முன்னோட்டமாக தொட்டுணர் கருவிகளை அறிமுகப்படுத்தியதின் அடிப்படையில் தொட்டுணர் (Bio – Metric) கருவிகளை பள்ளிகளில் பொருத்துவதற்கு வழிகாட்டியாக செயல்படுவதுடன், அதற்கான தொழில்நுட்ப கட்டமைப்பு குறித்தும் ஆலோசனைகள் வழங்குதல். தொடர் செலவினங்களை மேற்கொள்ளுதல். |
| 3. | இயக்குநர், மெட்ரிக் பள்ளிகள் | மெட்ரிக் பள்ளி இயக்ககத்தின் கீழ் இயங்கும் தனியார் பள்ளிகளில் தொட்டுணர் (Bio – Metric) வருகைப்பதிவு கருவிகள் செயல்பாட்டின் முறை, எந்த அளவிற்கு இத்திட்டம் சிறப்பாக செயல்படுகிறது. அதன் அம்சங்களை பெற்றுத் தருதல். |
| 4. | தேசிய தகவல் அலுவலர், தேசிய தகவல் தொடர்பு மையம் (NIC) முதன்மைப் பொது மேலாளர், பாரத் சன்சார் நிகாம் லிமிடெட் (BSNL) | தகுந்த தொட்டுணர் (Bio – Metric) கருவிகளை தேர்வு செய்து, அதன் வடிவமைப்பு மற்றும் ஆதார் அட்டை இணைப்பின் அடிப்படையில் தொழில்நுட்ப பயிற்சி குறியீடுகள், இயக்குமுறைகள் அதற்கான தளவாடங்கள் (Hardware), மற்றும் மென் பொருள் (Sofware), ஆகியவற்றினை முடிவு செய்து |

| | | |
|---|---|---|
| | இயக்குநர், தமிழ்நாடு அரசு மின் மேலாண்மை (TNEGA) நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மின்னணு நிறுவனம், (ELCOT). | கொள்முதலுக்கு ஆலோசனை வழங்குதல். |
| 5. | தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் | திட்டத்திற்கான நிதி (One time) அளித்தல். |

<u>தேவைப்படும் முக்கிய தொழில்நுட்ப சாதனங்கள் (Basic Needs)</u>

1. தொட்டுணர் கருவி (Bio Metric Device)
2. கணினி (Computer) அல்லது Tablet
3. இணையவசதி (Network) / சிம் (SIM) வசதி
4. மென் பொருள் பயன்பாடுகள் (Software Application)

மேலும் இத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த (1) உயர்மட்டக் குழு (2) களசெயல்பாட்டுக் குழு என இரு குழுக்கள் ஏற்படுத்தி, அதில் கீழ்கண்டவாறு உறுப்பினர்களை நியமிக்கலாம் எனவும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்:–

<u>(I) உயர்மட்டக் குழு:</u>

1. அரசுச் செயலர், பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9.
2. அரசு முதன்மைச் செயலர், தகவல் தொழில் நுட்பவியல் துறை, சென்னை–9.
3. அரசுச் செயலர் (செலவினம்), நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9.
4. நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மின்னணு நிறுவனம், (ELCOT), அண்ணா சாலை, சென்னை – 35.
5. துணை பொது இயக்குநர், தேசிய தகவல் தொடர்பு மையம் (NIC), இராஜாஜி பவன், பெசன்ட் நகர், சென்னை – 90.
6. இயக்குநர், தமிழ்நாடு அரசு மின் மேலாண்மை (TNeGA), ஆழ்வார்பேட்டை, சென்னை – 18.
7. முதன்மைப் பொது மேலாளர் (CGM, Tamilnadu Circle) தமிழ்நாடு வட்டம், பாரத் சன்சார் நிகாம் லிமிடெட் (BSNL), கிரீம்ஸ் ரோடு, சென்னை – 6

<u>(II) கள செயல்பாட்டுக் குழு:</u>

1. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை – 6.
2. மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்ககம், சென்னை – 6
3. உறுப்பினர் செயலாளர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை – 6
4. இயக்குநர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை – 6
5. இயக்குநர், தொடக்க கல்வித்துறை, சென்னை – 6
6. இணை இயக்குநர், மெட்ரிக்குலேஷன் பள்ளிகள், சென்னை – 6

7. முதுநிலை தொழில்நுட்ப இயக்குநர், (Sr, Technical Director), தேசிய தகவல் தொடர்பு மையம் (NIC), இராஜாஜி பவன், பெசன்ட் நகர், சென்னை – 90.
8. உதவிப் பொது மேலாளர் (AGM-EB), பாரத் சன்சார் நிகாம் லிமிடெட் (BSNL), கிரீம்ஸ் ரோடு, சென்னை – 6.
9. இணை இயக்குநர், தமிழ்நாடு அரசு மின் மேலாண்மை (TNeGA), ஆழ்வார்பேட்டை, சென்னை – 18.

4. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:–

(i). பள்ளிகளில் தொட்டுணர் (Bio-Metric) வருகைப் பதிவு முறையை செயல்படுத்த ஏதுவாக மேற்கண்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய உயர்மட்ட மற்றும் கள செயல்பாட்டுக்குழுக்களை அமைக்கவும், முன்னோடியாக சிறு அளவிலான திட்ட செயலாக்கத்தை பெரம்பலூர் மாவட்டத்தில் பரிசோதனை அடிப்படையில் செயல்படுத்தலாம்.

(ii). பெரம்பலூர் மாவட்டத்தில் பரிசோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட உள்ள இத்திட்டத்திற்கான செலவினம் ரூ.5.00 இலட்சத்தை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(iii). இத்திட்டத்திற்கான தொடரா செலவினம் ரூ.45,57,00,000/–ஐ (ரூபாய் நாற்பத்தைந்து கோடியே ஐம்பத்தேழு இலட்சம் மட்டும்) பரிசோதனை அடிப்படையில் பெறப்படவுள்ள முடிவுகளுக்கேற்ப செயல்பாட்டு திட்ட குழு அறிக்கையின் அடிப்படையில் தனியே பரிசீலிக்கலாம்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.12702/கல்வி–II/2017, நாள் 13.03.2017ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

த. உதயச்சந்திரன்,
அரசுச் செயலாளர்

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்,
சென்னை – 6.
மாவட்ட ஆட்சியர், பெரம்பலூர்.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
நகல்
அரசுச் செயலர், பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலர்,
தகவல் தொழில் நுட்பவியல் துறை, சென்னை–9.
அரசுச் செயலர் (செலவினம்), நிதித்துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மின்னணு நிறுவனம், (ELCOT),
அண்ணா சாலை, சென்னை – 35.

துணை பொது இயக்குநர், தேசிய தகவல் தொடர்பு மையம் (NIC),
இராஜாஜி பவன், பெசன்ட் நகர், சென்னை – 90.
இயக்குநர், தமிழ்நாடு அரசு மின் மேலாண்மை (TNeGA),
ஆழ்வார்பேட்டை, சென்னை – 18.
முதன்மைப் பொது மேலாளர் (CGM, Tamilnadu Circle)
தமிழ்நாடு வட்டம், பாரத் சன்சார் நிகாம் லிமிடெட் (BSNL),
கிரீம்ஸ் ரோடு, சென்னை – 6
மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்ககம், சென்னை – 6
உறுப்பினர் செயலாளர், தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம், சென்னை – 6
இணை இயக்குநர், மெட்ரிக்குலேஷன் பள்ளிகள்,
சென்னை – 6
முதுநிலை தொழில்நுட்ப இயக்குநர், (Sr, Technical Director),
தேசிய தகவல் தொடர்பு மையம் (NIC),
இராஜாஜி பவன், பெசன்ட் நகர்,
சென்னை – 90.
உதவிப் பொது மேலாளர் (AGM-EB),
பாரத் சன்சார் நிகாம் லிமிடெட் (BSNL), கிரீம்ஸ் ரோடு,
சென்னை – 6.
இணை இயக்குநர்,
தமிழ்நாடு அரசு மின் மேலாண்மை (TNeGA),
ஆழ்வார்பேட்டை, சென்னை – 18.
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு
மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர்
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி(கல்வி–II) துறை, சென்னை–9.
மண்டல தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

13/3/12